# செய்தி வெளியீடு

**இலங்கையின் பொருளாதாரம் 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 3.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது**

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

## 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு


தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


இலங்கையின், **2018** ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (ஏப்ரல், மே, ஜூன்)உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கான **2018** இரண்டாம் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமானது **3.7** சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, **2018** ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் நிலையான (2010) விலையில் **2,264,445** ரூபா மில்லியன்களாக அதிகரித்ததாக பதிவு செய்ததுடன் , இது 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் **2,183,122** ரூபா மில்லியன்களாகும்.

**2018** ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்குகளை முறையே **8.4** சதவீதம், **25.6** சதவீதம், **57.1** சதவீதம் மற்றும் **8.9** சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பதிவான 3.1 சதவீத சுருக்கத்தை ஒப்பிடும்போது விவசாயப் பணிகள் 4.5 சதவீதம் சாதகமாக விரிவடைந்தது. **2017** ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இக் காலப் பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் **2.3** சதவீத மிகச் சிறிய விரிவாக்கத்தையே காட்டியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது இக் காலாண்டில் சேவை நடவடிக்கைகள் மேலும் **4.8** சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.

முந்தைய வருடத்தின் அதே காலாண்டுடன் ஒப்பிடும்போது, விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், 'தானியங்களின் வளர்ச்சி (நெல் நீங்கலாக)', 'நெல் வளர்ச்சி', 'காய்கறிகளின் வளர்ச்சி', 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக', என்பன முறையே **19.2** சதவீத, **59.3** சதவீத, **9.6** சதவீத மற்றும் **5.4** சதவீதத்தால் **2017** ஆம் இரண்டாம் காலாண்டில் பதிவு செய்த பலத்த சுருக்கங்களை மீட்டதுடன், இக் காலாண்டுப் பகுதியில் விரிவடைந்துள்ளது. உப பிரிவுகளான 'பழங்களின் வளர்ச்சி',

'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி', 'கால்நடை உற்பத்தி' மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பன முறையே 6.9 சதவீத ,3.1 சதவீத, 2.6 சதவீத மற்றும் 32.8 சதவீதங்களால் மேலும் விரிவடைந்துள்ளன. இதேவேளை 'தேயிலை வளர்ச்சி ' மற்றும் 'இறப்பர் வளர்ச்சி' என்பன 7.1 சதவீத மற்றும் 11.9 சதவீத கணிசமான வீழ்ச்சியை பதிவு செய்யும்போது ' கடல் மீன்பிடி' 0.5 சதவீத மிகச் சிறிய சுருக்கத்தையே பதிவு செய்துள்ளது.

கைத்தொழில் துறை 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நான்கில் ஒரு பங்கு பங்களிப்பை செய்ததுடன், 2.3 சதவீதத்தாலும் விரிவடைந்துள்ளது. உற்பத்தித் துறை மட்டும் இக் காலப் பகுதியில் 3.2 சதவீதத்தால் மேலும் விரிவடைந்திருப்பதுடன்,'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி', 'நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தி', ' அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்' மற்றும் 'தளபாட உற்பத்தி' போன்ற உப நடவடிக்கைகள் முறையே 5.2 சதவீத, 1.9 சதவீத, 22.4 சதவீத, 6.3 சதவீத, 5.9 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் பிரதானமாக ஆதரவளித்துள்ளன. 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பதிவு செய்த 6.0 சதவீதத்துடன் இக் காலாண்டை ஒப்பிடும்போது, மொத்த தேசிய உற்பத்திக்கு, பிரதான பங்களிப்பாளரான 'கட்டிடவாக்கச் செயற்பாடுகள்' மெதுவான வளர்ச்சியான 1.4 சதவீதத்தையே காட்டுகின்றது. மின்வலு,வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடு 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 2.3 சதவீதத்தை பதிவு செய்கிறது.

2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஐந்தில் மூன்று பங்கை வழங்கும் சேவைத் துறையின் நடவடிக்கைகள் 4.8 சதவீதத்தால் விரிவை பதிவு செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, இச் சேவைத்துறையின் உப நடவடிக்கைகளான 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்','தங்குமிடம் உணவு மற்றும் குடிபானப் பணிகள்', 'தொலைத்தொடர்புகள் பணிகள்', 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', காப்புறிதி செயற்பாடுகள்', உண்மைச் சொத்துச் செயற்பாடுகள்'மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்' என்பவற்றின் செயல்பாடுகளால் இக்காலாண்டு முறையே 4.9 சதவீத 6.4 சதவீத 14.4 சதவீத, 9.0 சதவீத, 12.0 சதவீத, 11.0 சதவீத, 3.7 சதவீத, 4.8 சதவீதங்களால் விரிவடைந்து வலுத்துள்ளது. இக் கால இடைவெளியில் 'நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள்' 15.5 சதவீத கணிசமான சுருக்கத்தையும் காட்டுகிறது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2018 ஆம் இரண்டாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

திருமதி. ஐ.ஆர். பண்டார

பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்